# மதுரை தமிழ் மாநாட்டுக்கு இங்கிருந்து

பக்கங்கள் 8

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980-12-30
PERIODICALS DIVISION
LIBRARY

ஈழநாடு
The Eelanaadu
60 சதம்

மலர் 22 மார்கழி 14 ... பர் 22 இதழ் 322
யாழ்ப்பாணம் புதன்கிழமை 31 - 12 - 80

## 180 பிரதிநிதிகள் செல்வர்

(கொழும்பு)

மதுரையில் அடுத்தமாதம் நான்காம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஐந்தாவது உலகத் தமிழாராச்சி மகாநாட்டில் இலங்கையிலிருந்து 180 பிரதிநிகள் கலந்து கொள்ள விருக்கின்றனர்.

இலங்கைப் பாராளுமன்ற சபாநாயகர் ஜனாப் பாககீர் மாக்கார், கிராமியக் கைத் தொழில் அமைச்சர் திரு. சௌ. தொண்டமான், பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ இராசதுரை, எதிர்க் கட்சித்தலைவர் திரு. அ அமிர்தலிங்கம் உட்பட இருபத்தைந்துபாராளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் யாழ். மேயர், வடக்கு கிழக்கு மாகாணங்களின் உள்ளுராட்சி மன்றத் தலைவர்கள் உறுப்பினர்களும் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

நாற்பதுக்குமதிகமான நாடுகள் கலந்து கொள்ளவிருக்கும் அனைத்துலகலத் தமிழாராய்ச்சி மநாட்டில் முந்நூறுக்குமதிகமான ஆராய்ச்சி கட்டுரைகள் வாசிக்கப்படவிருக்கின்றன. இவற்றில் எழுத்தைந்து கட்டுரைகள் இலங்

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ். மாவட்டத்தில்

# 8 மாதத்தில் 1450 மோட்டார் சைக்கிள்கள் பதிவு

## போக்குவரத்து உதவி ஆணையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாண மாவட்டத்தில் இவ்வருடம் கடந்த 8 மாதங்களில் 1450 புதிய மோட்டார் சைகிள்கள் பதிவுசெய் பட்டுள்ளன.**

இத் தகவலை யாழ்ப்பாணம் மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் திரு. ஆர். எஸ். வைரசிங்கா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இவ்வருடம் ஏப்பிரல் மாதம் முதலே இங்கு வாகனப்பதிவு நடைபெற்றுவருகிறது.

கடந்த 8 மாசகாலத்தில் இங்கு 18 டீசல் கார்களும் 67 டீசல் லொறிகளும் 14 டிராக்டர் ரெய்லர்களும், 8 மினி பஸ்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இக்காலத்தில் 11 பெற்றோலில் இயங்கும் கார்களும், 7 பெற்றோலில் இயங்கும் ... சளும், 2 டிராக்டர் ... 2 இரண்டு சில்லு டிராக்டருப் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ச

## வடபிராந்திய பொலிஸ் மாஅதிபர் அலுவலகக் கட்டிடவேலைகள் இன்னும் பூர்த்தியாகவில்லை

(யாழ்ப்பாணம்)

சுமார் 30 லட்சம் ரூபா செலவில் வடபிராந்திய பொலிஸ் மாஅதிபர் அலுவலகமும் விடுதியும், யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்டு வருகின்றன. இதற்கென ஜனாதிபதி நிதியிலிருந்து பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்விரு கட்டிடங்களும், இன்று பாரம் கொடுக்கவேண்டிய நாளாகும் என்றும் வேலைகள் பூர்த்தியாகாததால் இன்று அவை பாரம்கொடுக்கப்படமாட்டாதென்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன

ஜனாதிபதி நிதியிலிருந்து இலங்கையில் 6 பிரதி பொலிஸ் மாஅதிபர் அலுவலகங்கள் அமைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

மட்டக்களப்பில் பிரதி பொலிஸ் மாஅதிபர் அலுவலகம் ஏற்கனவே பூர்த்தியாகத் திறக்கப்பட்டுவிட்டது. அனுராதபுரத்தில் பூர்த்தியாகும் நிலையிலுள்ளதாம். (க-அ)

மதுரை தமிழாராய்ச்சி மநாடு

## கம்பன் கழகத்துக்கு தமிழக முதலமைச்சர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மதுரையில் நடைபெறவிருக்கும் 5-வது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக அகில இலங்கை கம்பன் கழகத்தைச் சேர்ந்த 10 உறுப்பினர்களுக்கு தமிழக முதல் அமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அழைப்பிதழ்களை அனுப்பியுள்ளார்.

கம்பன் கழகம் தமது அங்கத்தவர்கள் 10 பேரை தமிழாராய்ச்சி மகாநாட்டில் கலந்து கொள்ள அனுப்ப விரும்பியது. மகாநாட்டின் இலங்கை அமைப்பாளருக்கு இது சம்பந்தமாக விண்ணப்பிக்க வேண்டிய காலம் கடந்துவிட்டதால் இக்கழகத்தைச் சேர்ந்த 10 பேரை மகாநாட்டில் கலந்து கொள்ள அனுமதிக்குமாறு கோரி தமிழக முதல்வருக்கு விண்ணப்பித்திருந்தது.

இவ்விண்ணப்பம் சம்பந்தமாக தமிழக முதல்வரின்

8 ம் பக்கம் பார்க்க)

## வயோதிபமாதின் தாலிக்கொடி கொள்ளை!

(பண்டத்தரிப்பு)

இரவுவேளையில் வீட்டில் தனித்திருந்த 80 வயது வயோதிபமாது ஒருவரின் 35 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க தாலிக்கொடி இனந்தெரியாத நபர் ஒருவரால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. மானிப்பாய் நாதர் லேனைச் சேர்ந்த திருமதி சின்னத்தங்கம் இராசரத்தினம் என்பவரது 15 தங்கப்பவுண் நிறையுள்ள தாலிக்கொடியே இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்டது.

இக்கொள்ளைச் சம்பவம் பற்றி ஆனைக்கோட்டை பொலிஸ் நிலயத்தில் உடனடியாகப் புகார்செய்யப்பட்டதை அடுத்து சார்ஜன்ட் தில்லன்துரை ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடாத்தினார். இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை புலன் விசாரணையில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

## வானொலி நிலயக் கட்டட வேலைகள் துரிதம்

(யாழ்ப்பாணம்)

சுமார் 20 லட்சம் ரூபா செலவில் கட்டப்படும் யாழ்ப்பாணம் பிராந்திய வானொலி நிலயச்கட்டடவேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

பண்ணையில் இதற்கென ஒதுக்கப்பட்ட காணியில் கட்டப்பட்டு வரும் வானொலி நிலய வேலைகள் பெப்ரவரி மாதம் பூர்த்தியாகுமெனஎதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலயத்தில் நிகழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்டு ஒலிபரப்புச் செய்யப்படும்.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பொறியியலாளர் திரு. ஞானசிகாமணியின் பொறுப்பில் கட்டட வேலைகள் நடைபெற்றுவருகின்றன. (க-அ)

## ‘ஈழநாடு’ பஞ்சாங்கம் 1981

1981-ம் ஆண்டுக்குரிய ‘ஈழநாடு’பஞ்சாங்கம் வழமைபோல் சகல அம்சங்களையும் கொண்டு 1—1—1981 அன்று வெளிவரும். வாசகர்கள் தங்கள் பிரதிகளுக்கு முன் கூட்டியே ‘ஈழநாடு விற்பனையாளர்களுடன் பதிவு செய்து கொள்ளவும்.

— நிர்வாகி

**AIR-CONDITIONING UNITS**

உங்கள் இல்லங்கள், தொழில் ஸ்தாபனங்களுக்கு தேவையான
குளிர்சாதனப் பெட்டிகள்
குளிரூட்டும் இயந்திரங்கள்
(WINDOW AIR CONDITIONING UNITS)
வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து தரப்படும்.
உங்கள் ஓடர்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.
வி. சு. அருளானந்தன்,
மே/பா து. மனோகரன்,
கோணாவலை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
மொத்த ஓடர் உடன் கவனிக்கப்படும் (7-14)

விரையுங்கள்! அரிய சந்தர்ப்பம்!!
ஹோம் பிறின்ஸ் லிமிட்.
★ ஹவாய்(Hawaii) டீலக்ஸ்16” மேசை மின் விசிறிகள்
வாடகைக் கொள்வனவில் விநியோகிக்கப்படும்
★ ‘ஹிண்ட் அம்பாஸடர்’ சைக்கிள்கள்
முழு செயின் கவர், பூட்டு, பெல், சைற் ஸ்ராண்ட், பம்ப், சாவி, சாவி Bag உடன்
வாடகைக் கொள்வனவில் பெற்றுக்கொள்ளலாம்.
ஹோம் பிறின்ஸ் லிமிட்டெட்,
82, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

சேவல் கோழிகள் (இறைச்சிக்கு) புதுவருட பண்டிகையை முன்னிட்டு தொகையாகவும், சில்லறையாகவும் மிக மிக மலிவாக விற்கப்படுகிறது. வளர்ப்பதற்கு2 மாதக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. சு. பாலேந்திரா, 586 கண்டி ரோட், நெடுங்குளம் சந்திக்கு அருகாமையில் அரியாலை யாழ்ப்பாணம். 7783

முட்டைகளுக்கென தெரிவு செய்யப்பட்ட உயர்ந்த இன ஒரு மாத பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. K. அழகராஜா, வேதக் கோயில், அல்வாய. (முத்துமாரியம்மன் கோயிலுக்கு அருகில்.) 7781

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அண்மையில் ஐந்தரைப் பரப்பு காணி, இரண்டு அறை கொண்ட வீடு கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும். விளம்பரதாரர், குருமனை உடுவில். 7811

## வாடகைக்

யாழ். நகரசபை எல்லையில் இருந்து இரண்டு மைல் தூரத்திற்குள் மானிப்பாய் ரோட்டில் போக்குவரத்து வசதியுடன் Annex சகல வசதியுடன் வாடகைக்கு உண்டு. விபரங்கட்கு எஸ். பத்மநாதன், 40, செட்டித் தெரு ஒழுங்கை, யாழ்ப்பாணம். 7796

## பயிற்சி

3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 28-01-1981-ல் ஆரம்பமாகின்றது. Institute of Engineering Technology 9 Stanley Road, Jaffna 7818

3 மாத எலச்றிக்கல் டிப்ளோமா பயிற்சி 19-01-1981-ல் ஆரம்பமாகின்றது. Institute of Engineering Technology 9 Stanley Road, Jaffna. 7817

# திருமலை நகரசபை கலாசார மண்டபம் அமைக்கும்

(திருகோணமலை)

திருகோணமலை நகராட்சி மன்றத்தின் மாதாந்தக் கூட்டத்தில சகல வசதிகளும் கொண்ட பிரமாண்டமான கலாசார மண்டபம் ஒன்றை தற்போதைய நகராட்சி மன்றக் கட்டிடத்திற்குப் பின்புறம் அமைப்பதென்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்தக் கலாசார மண்டபத்திற்கான செலவிற்கு நகராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவரினதும் மாதாந்தச் சம்பளம் முழுவதையும் கொடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது. திருகோணமலையில் இதுவரை காலமும் கலாசார மண்டபம் இல்லாததினால் பல கலை நிகழ்ச்சிகள் பள்ளிக்கூடங்களிலும் தனியார் மண்டபங்களிலுமே நடைபெற்றுவந்தன கலாசார மண்டபம் நிறுவப்பட்டதும் இக்குறை நிறைவேற்றப்படும். (அ)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் பழம் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையிலுள்ள முருகமூர்த்தி கோவிலின் மகா கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்க கிரியா நிகழ்ச்சியாகிய யந்திர பூசை கடந்த 8ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இக் கிரியாநிகழ்ச்சியைப் பிரதிஷ்ட சிரோன்மணி பிரம ஸ்ரீசாம் விசுவாசக்குருக்கள் ஆரம்பித்து வைத்தார்.

மகாகும்பாபிஷேகம் அடுத்த மாதம் 25ம்திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறும். (அ)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கேள்விப்பத்திர அறிவித்தல்

1981-ம் ஆண்டுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தால் நடாத்தப்பட்டு வரும் பிரசவ விடுதிகளின் அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்குரிய கேள்விப்பத்திரங்கள் 9-1-81-ந் திகதி வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் அன்றைய தினம் பிற்பகல் 3-30 மணிக்குத் திறக்கப்படும். விரும்பிய கேள்விக்காரர்கள் பிரசன்னமாயிருக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் 8-1-81-ந் திகதி வியாழக் கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் ரூபா 50-00 வைப்புப் பணமாகவும் ரூபா 5-00 கேள்விப்பத்திரக் கட்டணமாகவும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

இதன்கீழ் கையொப்பம் வைத்திருப்பவரிடமிருந்து அல்லது சுகாதார வைத்திய அதிகாரியிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் பற்றிய ஏனைய விபரங்களையும் நிபந்தனைகளையும் தேவையானோர் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பம்
க. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

சுகாதார பகுதி,
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
26-12-80. (7816)

## போட்டியின்றித் தெரிவு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க நெறியாளர் குழுவிற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் திருவாளர்கள் த. இராசதுரை, ச. சிவலிங்கம். செ. விசுவலிங்கம், ச. சு. சிலுவைராசா, ச. செபஸ்தின்பிள்ளை ஆகியோர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர். (கு)

## தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் ஆனையிறவு

தேசிய உப்புக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு பண்டகசாலையில் 8125 புதியதும், 68 பாவித்ததுமான கயிற்றுச் சாக்குகள் விற்பனைக்கு உண்டு. இவை உப்பு, மரக்கறி, வெண்காயம் முதலியன கட்டுவதற்கு உகந்தவை.

[illegible]குறிப்பிட்ட தொகை சாக்குகளை பெற்றுக்கொள்வதற்கான கேள்விப்பத்திரங்கள், 1981ம் ஆண்டு ஜனவரி மாசம் 8ம் திகதி வரை கீழ்க் குறிப்பிடப்படும் விலாசத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். சாக்குகளைப் பார்வையிட விரும்புவோர், ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் ஆனையிறவு உப்பளப் பண்டகசாலையில் காலை 6-00 மணி முதல் பிற்பகல் 2-00 மணி வரை பார்வையிடலாம்.

பிராந்திய முகாமையாளர்
தேசிய
உப்புக் கூட்டுத்தாபனம்
ஆனையிறவு.
23-12-1980. 7752

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 16ம் திகதி

புதன்கிழமை

(31-12-80)

**மேடம்:** காதலர்களுக்கு சந்தோஷமான தினம் பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும் இல்லத்தில் இனிமையான சம்பவங்கள் இடம் பெறும். இன்று சுபதினம்.

**இடபம்:** அவசரப் போக்கினால் அதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளுவீர்கள். எதற்கெடுத்தாலும் ஆத்திரம் ஏற்படும் தவறான வழி மூலம் பணம் பாழாகும் முகமன் கூறுவோர் விடயத்தில் முன் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

**மிதுனம்:** தன்மான மிகுதிக்கும் தனவரவுக்கும் இடமுண்டு. சிலருக்கு வாகன சுகமும் கிடைக்கும் குடும்பத்தில் தென்றல் வீசும் உறவினர்கள் படையெடுத்து வருவார்கள்.

**கடகம்:** வெற்றிப்பாதையில் வீறுநடைபோடுவீர்கள் தொழில் துறையில் புதிய உற்சாகம் பிறக்கும் எதிரிகள் மத்தியில் ஏற்படும் மனமாற்றம் உங்கள் செல்வாக்கை வளர்க்கும் சுபதினம்.

**சிங்கம்:** நடையில் தயக்கம் ஏற்படும் உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகிவிடும் சகோதரவழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு. உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம்.

**கன்னி:** தற்பெருமை தவறான பாதைக்கு அழைத்துச் செல்லும். பொருளும் பல வழிகளில் செலவாகும் கொடுக்கல் வாங்கல் மூலம் பிணக்குகள் தோன்றலாம். பொறுமையைப் பேணவும்.

**துலாம்:** வாழ்க்கை மேடு பள்ளம் நிறைந்ததாக இருக்கும் கடன் வாங்கவும் நேரிடலாம். உடல் நலத்தைப் பேணிக்கொள்ளவும். பயங்கரமான காரியத்தைத் தவிர்ப்பது விரும்பத்தக்கது.

**விருட்சம்:** சிறப்பான சம்பவங்கள் இடம் பெறும். சீருடன் வாழ்வீர் பெரிய இடத்துச் சினேகம் அநுகூலங்களைக் கொண்டுவரும் வியாபாரத் துறையில் விருத்தியும் செல்வாக்கும் பெருகும்.

**தனு:** அறவழியை நாடுவீர்கள் தெய்வசிந்தனைதே மேலோங்கி நிற்கும் குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை தென்படும். புண்ணிய யாத்திரை ஒன்றை மேற்கொள்ள விரும்புவீர்கள்.

**மகரம்:** புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். புதிய அனுபவங்கள் கிடைக்கும் குறிக்கோளில் வெற்றியுண்டு ஆனந்தநிலை.

**கும்பம்:** எண்ணம் போல் வாழ்வு இன்று மலரும் சிலருக்கு திடீர் திரவிய லாபமும் கிடைக்கும். கலகலப்பான தினம்.

**மீனம்:** தவறுகள் நடக்கலாம். நிலையும் தடுமாறும் நண்பர்களே காலை வாரிவிடக் கூடும். சிலருக்கு அன்னிய வாசம் ஏற்படலாம்,

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## கட்டாக்காலி நாய்கள் தொல்லை

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை நகரில் கட்டாக்காலி நாய்களால் பாதசாரிகள் தெருவில் செல்ல முடியாமல் இருக்கின்றது. இந்த நாய்களின் தொல்லையால் தெருக்கள் அழுக்கடைந்துள்ளன.

பெரும்பாலும் பாரதி வீதி கிருஷ்ணவீதி, மாணிக்கவாசகர் வீதி, திருமால் வீதி என்பன நாய்கள் அதிகரித்த பகுதிகளாகும். (அ)

## ஆசிரியர் பயிற்சி கலாசாலை விடுதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்தியமகாவித்தியாலயம் மட்டக்களப்புப் பல்கலைக்கழக வளாகத்திற்காக மூடப்பட்டு சித்தாண்டியில் திறக்கப்பட்டதை அடுத்து அதன் கீழ் கல்வித்திணைக் களத்தினால் நடாத்தப்பட்ட விடுதி மூடப்பட்டது.

இதனையடுத்துமட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் விடுதிக்கு அதற்குரிய படுக்கைமெத்தை கட்டில்கள் என்பவற்றை கல்வி இலாகாமாற்றம் செய்ய முன்வந்துள்ளது

அடுத்த வருடம் தற்போது வெளிக்களப்பயிற்சியில ஈடுபட்டிருக்கும் மாணவ ஆசிரியர்களுடன் புதிதாக அதிகமான மாணவ ஆசிரியர்கள் சேர்த்துச் சொள்ளப்படவிருப்பதால் மேற் கூறிய பொருட்கள் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து கலாசாலை அதிபர் திரு த. புலேந்திரன் கல்வித்திணைக்களத்துடன் நடாத்திய பேச்சுவார்த்தையஅத்தே மேற்கண்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஆசிரியகலாசாலை விடுதி வசதிகளும் தற்போது விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

## பெயர் மாற்றம்

அல்லாரை வடக்கு மீசாலையைச் சேர்ந்த கதிரித்தம்பி அருணாசலத்தின் மகள் தெய்வானைப் பிள்ளையாகிய நான் எனது பெயரை **தருணி** என வழங்கப்போவதை இலங்கை அரசாங்கத்திற்கும் பொது சேவைப் பகுதிக்கும் அறியத்தருகின்றேன். எல்லாப் பிரதிகளையும் அ. தருணி எனக் கையொப்பம் இடப்போவதாகவும் அறியத்தருகிறேன்.


7821 அ. தருணி.





சில நிமிடங்களில்
கிருமிப் பீடைகளை ஒழிப்பது
எக்கலக்ஸ்-25

தேயிலை, நெல், பருத்தி, கனி மரங்கள், காய்கறி மற்றும் பயிர்களில் பாவிக்கச் சிபாரிசு செய்யப்படுகிறது




| | |
|---|---|
| 50 மி. லிற் | 12.50 |
| 200 மி. லிற் | 42.00 |
| 450 மி. லிற் | 89.65 |
| 1 லிற் | 206.00 |

இறக்குமதியாளர்கள்:
ஏ. பவர் அன்ட்
கம்பனி லிமிட்டெட்
62, ஜெதவன வீதி,
கொழும்பு

"மெற்றலிக்ஸ்"
கணித உபகரணங்கள்
(METALIX MATHEMATICAL INSTRUMENTS)
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
சில்லறை விலை
சாதாரணம் — ரூபா 27-50
விசேஷம் — ரூபா 36-00
சீடில்ஸ் (யாழ்ப்பாணம்)
லிமிட்டெட்
151, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(போன்: 507) (7807)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "தார்மீகம் பேசும் அரசு தமிழ்மக்களை வதைக்கிறது"

## சாவகச்சேரியில் அமிர்

(மட்டுவில்)

மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படுவது மனிதனின் சுயநிர்ணய உரிமைகள் காப்பாற்றப்படுவதற்கும் சமதானத்தை நிலைநாட்டுவதற்குமே. ஆனால் தார்மீகம் பேசும் இலங்கை அரசு தமிழ்மக்கள் சுயநிர்ணய உரிமை கோரும் போது அவர்களைவதைக்கிறது;

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், சாவகச்சேரியில் நடைபெற்ற மனித உரிமைகள் தினக்கூட்டத்தில் பேசுகையில்கூறினர்

சாவகச்சேரி சந்தை மைதானத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தை அறவழிப் போராட்டக்குழுவும் சாவகச்சேரி நகராட்சி மன்றமும் இணைந்து நடத்தினது.

நகரபிதா திரு. எஸ் கே. திரவியநாயகம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

தமிழ்மக்கள் சுயாட்சி கேட்டதனாலேயே 77ல் இனக் கலவரம் தோன்றியதாக சன்சோனிக் கமிஷன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. அப்படியானல் 58ல் நடந்த இனக்கலவரத்தின்போதும் யாராவது சுயாட்சி கேட்டார்களா?

கனடா, பிரான்ஸ் போன்ற மேலைநாடுகளிலும் மக்கள் சுயாட்சி கோருகின்றனர். அங்கெல்லாம் அவர்கள் தாக்கப்படுவதில்லை.

எமது மத்தியில் தீண்டாமை என்றபெயரில் ஒரு சாராரின் மனிதஉரிமைகள் மறுக்கப்படுகின்றன. இரதசாபக்கேடுஒழிந்தாலேயே நமது இலட்சியம் நிறைவேறும்'';

சாவகச்சேரி திரு. வி. என். நவரத்தினம், திரு. வி. ஜி. தங்கவேலு, எஸ். கே. மயில்வாகனம் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர். (இ)

# யாழ். நூல் நிலையம்பற்றிய ஆணைக்குழு அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பொது சன நூல் நிலைய ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையை நாம் பரிசீலித்து வருகிறோம். இவ்வறிக்கையில் கூறப்பட்ட பரிந்துரைகள் பற்றி நல்ல முடிவுக்கு வருவோம்.

யாழ்ப்பாண பொது சன நூல்நிலையத்தில் நடைபெற்ற சிறுவர்களுக்கான பரிசளிப்பு வைபவத்திற்கு பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட, யாழ்ப்பாண மாநகர சபை மேயர் திரு. இராசா விசுவநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சிறுவர்களும். பெற்றோர்களும் கலந்து கொண்ட சிறப்பித்த இவ்வைபவத்திற்கு யாழ்ப்பாண பொதுசன நூல்நிலைய நூலகர் திருமதி ஆர் நடராசா தலைமை தாங்கினர்.

திரு. விசுவநாதன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-


''இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்பதை உணர்கின்றோம். அவர்களது இளமைப் பருவத்திலேயே கடமை, ஒழுக்கம், கட்டுப்பாடு போன்ற நல்ல பண்பாடுகளை பெற்றோர்கள் போதிக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் நாளைய சந்ததியின் தலைவர்களாக விளங்க முடியும்.

ஒவ்வொரு மனிதனையும் பூரணப்படுத்துவது வாசிக்கும் பழக்கமாகும். அடுத்தாண்டும், மாநகரசபை இந்நூலகத்தின் வசதியை மேம்படுத்துவதற்காக எண்பது ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது. இந்நூலகத்தின் நூலகர் சிறந்த சேவையாற்றுவதால் பல முன்னேற்றங்களை நூலகத்தில் ஏற்படுத்த முடிகிறது''

பரிசில்களைத் திருமதி விசுவநாதன் வழங்கினர்.

# கௌரவ முதுமானிப் பட்டம்

## பெற்ற திரு. செல்லப்பா நாகமுத்து



தொழில் நுட்ப வல்லுநர் ஒருவர் கொழும்பு. பல்கலைக் கழகத்தினால் அவர் விஞ்ஞானத்துக்கு ஆற்றிய பணிகளுக்காக முதல் முதலாக அங்கீகரிக்கப்பட்டளித்துக் கௌரவிக்கப்பட்டிருக்கிறர். அவர் தான் மருத்துவத்துறையில் ஒட்டுண்ணியல பகுதி தொழில் நுட்ப வல்லுநரான திரு. செல்லப்பா நாகமுத்து அவர்கள், அவருக்கு இம்மாதம் 22-ம் திகதி நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கௌரவ எம். எஸ். ஸி பட்டமளிக்கப்பட்டது.

1917ல் புன்னாலைக்கட்டுவனில் பிறந்த இவர், இடைநிலைக்கல்வியை ஸ்கந்தவரோதயக்கல்லூரியிலும் சென்பற்றிக்ஸ் கல்லூரியிலும் பெற்ற போது விளையாட்டுத் துறையிலும் பிரபலமாயிருந்தார். சில காலம் இலங்கை தொழில் நுட்பக்கல்லூரியில் நில அளவை பயின்றாராயினும் 1939ல்இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் பௌதிகத்துறையில் தொழில் நுட்ப வல்லுநராக நியமனம் பெற்றார். இதிலிருந்து வில்லைகளையும் அரியங்களையும் நுணுக்குக்காட்டிகளில் தாக்கும் பூஞ்சணங்கள்பற்றி ஆராய்ந்தார். பல ஆராய்ச்சியாளருக்கு உதவியும் பல ஆராய்ச்சிக்கட்டுரைகளை எழுதியும் பிரசித்திபெற்ற இவர், நுணுக்குக்காட்டி உற்பத்தியாளர்களினதும் பொதுநலவாய பூஞ்சண நிறுவனத்தினதும் ஆதரவைப் பெற்றார்.

1968ல் முதலாவதாகத் திகழ்ந்த உயிர்ச்சிதைவு கருத்தரங்குக்கு அழைப்புப்பெற்றஇவர் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் மண்வாழ் பூஞ்சணங்களைப்பற்றி ஆய்வுகள் மேற்கொண்டு இவை ஒளிக்கருவிகளில் காணப்படுவனவற்றை ஒத்தவையென்று முதலாவதாகச் சுட்டிக்காட்டினர்.

வற்சன் நுணுக்குக்காட்டித் தொழிற்சாலையிலும் வெப்பவலய நோயியல் கல்லூரியிலும் இவர் பயிற்சி பெற்றுள்ளார். நுணுக்குக்காட்டிகளைப் புதுப்பித்தலில் இவர் பல வெளிநாட்டுவிஞ்ஞான நிறுவனங்களுக்கு உதவியும் இலங்கைக்கு இவருடைய விசேட அறிவினால் பெருந்தொகை அந்நியச் செலாவணியை மீதப்படுத்தியும் உள்ளார்.

63 வயதானபோதிலும் இன்றும் இலங்கை மருத்துவக் கல்லூரி தொழில்நுட்ப வல்லுனருக்கு தான் கற்றறிந்த நுட்பங்களைப் பயிற்றும் உயரிய பணியில் ஈடுபட்டிருக்கிறர்.

—நேசன்

# இவர்களுக்கு விசேடபடி ரூ. 70 கிடைக்கவில்லை

(சித்தன்கேணி)

சங்கானை ப. நோ. கூ. ச. சமாச ஊழியர்களுக்கு அரசாங்கத்தினால் நவம்பர் மாதம் தொடக்கம் அதிகரித்த 70 ரூபா விசேஷபடி வழங்கப்படவில்லை.

அனேகமான தனியார்நிறுவனங்களும் கூட்டுறவு நிறுவனங்களும் இவ் விசேடபடியை வழங்கியுள்ளபோதிலும் இச் சமாஜம் இதுவரை விசேடபடியை வழங்கவில்லையென்று ஊழியர்கள் கவலை தெரிவித்தனர். (அ

# 2 ஆயிரம் ஆண்டளவில் சகலருக்கும் சுகாதார வசதி

## டாக்டர் அத்தபத்து நம்பிக்கை

(கொழும்பு)

இரண்டாயிரம் ஆண்டளவில் இந்த நாட்டின் சகல பிரஜைகளுக்கும் சுகாதார வசதிகளை அளிப்பதென்ற குறிக்கோளையடையமுடியும் என்று அரசு நம்புகிறது. இக் குறிக்கோளை அடைய சுகாதார பராமரிப்பு முறையில் மாற்றம் கொண்டுவரப்படவேண்டும்.

இவ்வாறு கொழும்பு ஆஸ்பத்திரிகளின் அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து நேற்று கொழும்பில் நடைபெற்ற மகாநாடு ஒன்றில் பேசுகையில் கூறினர்.

தேகஆரோக்கியமுள்ள மனித சக்திக்கு திட்டமிடல் என்ற பொருள்பற்றிய கருத்தரங்கில் பல வெளிநாடுகளும் பங்குபற்றின.

அமைச்சர் மேலும் பேசுகையில் எமது நாட்டில் மிகச் சிறந்த வைத்தியக் கல்விமுறை இருந்தபோதிலும் கிராமப்புற மக்களுக்கு உரிய வைத்திய வசதிகளை அளிக்கப் போதிய டாக்டர்களைப் பெற முடியாதிருக்கிறது என்று கூறினர். (இ)

# ஜனவரி சீசன் டிக்கட் இன்னும் இல்லை!

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஜனவரி மாதத்திற்கான பஸ் சீசன் டிக்கட்டுகளை இன்னமும் வழங்கவில்லை.

25-ம் திகதி முதல் வழங்கப்படும் சீசன் டிக்கட்டுகள் இன்னமும் வழங்கப்படாமை குறித்து யாழ். பஸ் நிலையத்தில் விசாரித்தபோது கொழும்பிலிருந்து சீசன் டிக்கட்டுகள் கிடைக்காமையினலேயே டிக்கட்டுகள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தனர்.

இதே சமயம் 'மறு அறிவித்தல் வரை சீசன் டிக்கட்டுகள் வழங்கப்படமாட்டாது' என்று யாழ். பஸ் நிலைய அறிவித்தல் பலகையில் எழுதப்பட்டிருப்பதை பார்த்த பிரயாணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி செல்கிறார்கள். (இ)

# யாருடைய கைக்கடிகாரம்?

மானிப்பாய் எழுமுள்ளியில் கீரிமலை வீதியில் கைக்கடிகாரம் ஒன்று சண்டிலிப்பாயைச் சேர்ந்த க. விநாயகமூர்த்தி என்பவரால் நேற்றுக் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ளலாம்.

# பொங்கல் விழா

(உடுப்பிட்டி)

நெல்லியடி சனசமூகநிலையம் நடாத்தும் பொங்கல் விழா எதிர்வரும் 13ம் திகதி மாலை நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கலை, கலாசார நிகழ்ச்சிகள் இடம்பெறும். (ஆ)

# வர்த்தமானி தாமதம்

(உடுப்பிட்டி)


கொழும்பிலிருந்து வெளியிடப்படும் வர்த்தமானி வடமராட்சிப்பகுதிக்குக் காலதாமதமாகி வந்தடைவதால் பொதுமக்களும் இளைஞர்களும் பெரிதும் பாதிப்பும் கஷ்டமும் அடைந்துவருகின்றனர்.

கொழும்பில் உரிய காலத்தில் வெளியாகும் வர்த்தமானி பல வாரங்களுக்கு பின்னரே வடமராட்சிபகுதிக்கு வந்துசேருகின்றது. இப்பகுதிக்கு வந்து சேரும்போது அவ்வர்த்தமானியில் கோரப்படும் விண்ணப்பங்களின் முடிவுத் திகதியும் முடிவடைந்து விடுகின்றது. (அ)


# நியாயமான விலையில் சிறந்த ரேடியோ

சீடில்ஸ் மொடல் ST 310 I C ஒரு அலைவரிசை மத்திய அலை ரேடியோ - 4 மின்கல இயக்கம் - ரூ. 425/-
சீடில்ஸ் மொடல் ST 320 I C இரண்டு அலைவரிசை மத்திய அலை/சிற்றலை - 4 மின்கல இயக்கம் ரூ. 625/-
சீடில்ஸ் மொடல் ST 73 A மூன்று அலைவரிசை மத்திய அலை/சிற்றலை 1/சிற்றலை 2 - 4 மின்கல இயக்கம் ரூ. 625/

எல்லா மொடல்களுக்கும் 12 மாத உத்தரவாதமும் நம்பகமான விற்பனைப் - பின் - சேவையும் கிடைக்கும்.




சீடில்ஸ் சினி ரேடியோ
9-10 பூந்தோட்ட வீதி, கொழும்பு 11.
தொலைபேசி: 27311

எல்லா சிங்கர் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இறைவனுடைய திருநாமங்கள் பலவாகும் அவரை அணுகுவதற்கு வழிதரும் ரூபங்கள் அனந்தமானவை. அவரை நீ எந்த நாமங் கொண்டு, எந்த ரூபங் கொண்டு வழிபட்டாலும் அததன் மூலம் நீ அவரை அறிந்துணருவாய்.

- ஸ்ரீ ராமகிருஷ்ணர்

## நமது நோக்கு

### செல்விருந்து

இன்று இவ்வருடம் முடிவடைகிறது. அதற்கு மேனாட்டு நாகரிக முறையில் இரவு 12 மணிக்கு சாமணி அடிபடும்.

எமது புதுவருடம் சித்திரை மாதப் பிறப்பில் கொண்டாடப்படுவதானாலும், சர்வதேச ரீதியில் இன்று நள்ளிரவில் பிறக்கும் 1981-ம் ஆண்டுதான் உத்தியோகபூர்வமான புத்தாண்டு எனறு நாம் கொள்வது மரபு.

எனவே நம்மை விட்டுப் பிரியும் இவ்வருடத்தை மிகக் கௌரவமாக வழி அனுப்பி வைப்பது எங்கள் பண்பு.

''செல்விருந்தோம்பி
வருவிருந்து
பார்த்திருப்பான்
நல்விருந்து
வானத்தவர்க்கு''

என்பது வள்ளுவர் வாக்கு.

கழிந்துபோகும் இவ்வருடம் என்னென்ன கெடுதிகளை விளைவித்து விட்டபோதும், அதனைக் கடைசிமட்டும் கவனித்து விடுவது தமிழ்ப் பண்பாடு

எங்கள் நாட்டிலும், பிற நாடுகளிலும், சில உலகிலுமே பொருளாதாரச் சீர்கேடு இவ்வருடத்தில் அதிகரித்து விட்டது. நாடுகளுக்கிடையே இருந்த நல்லுறவு பலவீனப்பட்டுள்ளது. கம்பூச்சியா, ஆப்கான் குழப்பங்கள், ஒரு வருடத்திற்குமேல் ஈரானில் அடைபட்டிருக்கும் அமெரிக்க கைதிகள் பிரச்னை ஆகியன வெளிநாட்டின் அமைதியின்மையைக் குறிக்கின்றன

உள்நாட்டில் சர்வதேச ரீதியில் எரிபொருள் விலையேற்றத்தால் எழுந்த வாழ்க்கைச் செலவின் திகரிப்பு, வேலைநிறுத்த விவகாரங்களை ஏற்படுத்தியது அதன் விளைவாக இரண்டரை லட்சம் மக்கள் இன்றும் பாதிக்கப்பட்ட நிலையில் வருந்துகின்றனர்.

அரசின் நிர்ப்பந்தமின்றி மக்களுடைய ஆசாரத்தின் மூலமாவே, பசி பட்டினியில் வருந்துகிறவர்களுக்கு உணவு கிடைக்க ஏதுவாக இருந்தது. முனிவர் கூறும் விருந்தோம்பல் இன்று பசித்து உணவின்றித் துன்பப்படுகிறவர்களை, வரிதிரட்டும் அரசு எவ்வாறு நடத்துகின்றது? இன் அன்னமிடும் கடமை அரசையே சார்ந்திருக்கிறது.

இன்று தீவிரமாகத் தொழிற்படும் மகாவலித் திட்டமும் அதுபோன்ற ஏனைய திட்டங்களும் மக்கள் பசியைத் தீர்ப்பதற்காகவே துரிதப்படுத்த வேண்டியவை. தொழிற்பட முன்னர் மக்கள் மாண்டுபடியாமலும், அது பூர்த்தியடையும் நிலையில் ஜனத்தொகை பெருகாமலுமிருக்கும் வாய்ப்பு சாத்தியமானதா?

எங்கள் சமூகப் பொருளாதாரம் இன்னும் தர்மத்தையே சார்ந்து நிற்கின்றது சோஷலிச சித்தாந்தத்திற்கு அது எவ்வகையிலும் மாறுபட்டதல்ல.

பொருள் சம்பாதிப்பது தர்மத்துக்கு விரோதமில்லாத வழியில் நடைபெற வேண்டும் ஒருவன் தன் செல்வத்தை தனக்குப் பின் தன் மக்களுக்குப் போய்ச் சேரும்போது, அவர்கள் அதைப்பற்றி வெட்கப்படாமல் பெருமையுடன் அனுபவிப்பார்கள். இதனை ஆழமாக ஆராய்ந்தால் நல வழியில் பொருள் தேடுவதே விவேகமும் சிறப்பும்.

வருட முடிவில் இதனை நாம் வற்புறுத்துவது இன்று நடைமுறையில் இருக்கும். தாராளமான பொருளாதாரக் கொள்கையைக் குறித்தேயாகும். ஜனநாயக சோஷலிசக் குடியரசு என்ற விலாசமுள்ள இலங்கையில் இன்று நடைபெறும் வணிகமுறையும் கள்ளக்கடத்தலும் நாட்டின் நடுத்தரவர்க்கத்தினரைப் பிச்சைக்காரராக்கிவிட்டது அதவும் சடுதியில் நிகழ்ந்துவிட்டது

''வியாபாரம் செய்பவர்களுக்குமே நேர்மை ஒரு சிறந்த வியாபார முறையாகும்'' என்று ஆங்கிலத்தில் ஒரு பழையவாசகம் உண்டு. 'உண்மைதான் லாபமும் தரும் யுக்தி' என்பது எங்கள் கூற்று இதனை இன்றைய வணிகர்கள் அறிவார்களா?

நாட்டின் வளர்ச்சித் திட்டம் எதுவானாலும், தனிமனிதன் உழைப்பின்றி உண்ண முயலுவதும் வியாபாரத்தில் நேர்மையின்றி நடக்கலாம் என்பதும் தொடர்ந்து நிலவுவதால் எங்களுக்கு விமோசனம் எட்டத்தில் தான் என்பது தெளிவாகும்.

வாழ்க்கையில் வசதிபெற்றவர்கள் தாம் மட்டும் உண்டு உடுத்து களித்து விடும் வர்க்கத்தினரானால், நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்து மோசமடையும் களவு, வழிப்பறி, அமைதியின்மை, ஏன் யுத்தமே தலையெடுக்கும்.

## ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் நிரந்தர விரிவுரையாளர் நியமனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் விசேட பாடநெறிகளான கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் உட்பட சகல பாடநெறிகளுக்கும் நிரந்தர விரிவுரையாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இதற்கான பேச்சுவார்த்தை கலாசாலை அதிபர் திரு. த. புலேந்திரன், ஆசிரியர் கல்விப்பணிப்பாளர் திரு பள்ளியக்காரராவுடன் நடாத்தியதையடுத்தே இந்நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற விசேடநெறிகள் 1979 ஜூன் ஆரம்பிக்கப்பட்டதுமுதல் இன்று வரை பகுதிநேர விரிவுரையாளர்களால்தான் விரிவுரை நடத்தப்படுகிறது. இதனால் கலாசாலை நிர்வாகத்திற்கு ஏற்படுகின்ற செலவு, மாணவர்கள் பயிற்சிப் பாதிப்பு என்பன அதிபர் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தார். இந்நெறிகளுடன் புதிதாக அடுத்தவருடம் ஆரம்பிக்கப்படவுள்ள விவசாய விஞ்ஞானம், மனையியல் பாடநெறிகளுக்கும் நிரந்தர விரிவுரையாளர்கள் நியமிக்கப்படலாமென்று தெரிகிறது.

### வார்தா குருகுலத்தின் கல்விப்பணி

(யாழ்ப்பாணம்)

வார்தா குருகுலத்தின் ஆதரவில் வழமைபோல் சில மாணவர்களுக்கு கல்வி கற்கும் வசதிகள் செய்யப்பட விருக்கின்றன.

சைவப்பெரியார் சிவபாத சுந்தரனார் பேரில் தீவுப்பகுதியைச் சேர்ந்த இருமாணவர்களுக்குசேர். இராமநாதன் பேரில் இருமாணவர்களுக்கும் மாணிக்கம் பேரில் இருமலைநாட்டுமாணவர்களுக்கும் இந்த வசதிகிடைக்கும் இம்மாணவர்களுக்கு உணவு, உடையுடன் வசதிகள் செய்து கொடுப்பதுடன் யாழ்ற்றன் கல்லூரியில் கல்வி கற்கவும் வழி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது

## மக்கள் கருத்து

### நகரில் சுகாதாரச் சீர்கேடு

இன்று வவுனியா வடமாகாணத்தின் எல்லையாகவும் கொள்வனவு, விற்பனவு செய்யும் தானியகளஞ்சிய சந்தையாகவும் விளங்குகின்றது ஜனத்தொகை அதிகரிப்பும் போக்குவரத்து வாசனங்களின் அதிகரிப்பும் நிறைந்துள்ள வவுனியா நகரில் இன்று சுகாதாரச் சீர்கேடுகள் பல மலிந்து காணப்படுகின்றன.

இன்று நகரசபையில் அங்கம் வகிப்பவர்கள் தேர்தல் காலத்தின்போது வாக்குறுதிகளை அள்ளி வீசினார்கள். தேர்தல் முடிந்து இரண்டு வருடங்கள் கழிந்துவிட்டன.

அதிகரித்துவரும் பிரயாணிகளின் நெருக்கத்திற்கும் பஸ்களின் தொகைக்கும் ஏற்ற விதத்தில் தங்குமிட வசதிகள், கழிப்பிட வசதிகள் செய்து, பஸ் நிலையத்தை விஸ்தரிப்பதற்கு எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை

மனழச்சாலத்தில் பஸ் நிலையம் சேறும் சகதியும், மேடும் பள்ளமும், கால்நடைகளின் நடமாட்டமுமாகக் காட்சிதருகின்றன.

அருகாமையிலுள்ள பொதுசன மலசலகூடம் குப்பைகூளத்திற்கும், தேங்கி நிற்கும் கழிவு நீருக்கும் மத்தியில் அமைந்திருப்பதனால் துர்நாற்றத்தையும், சுகாதாரச் சீர்கேட்டையும் ஏற்படுத்தியவண்ணமிருக்கின்றது மத்திய சந்தை மற்றும் குடியிருப்பு, பூந்தோட்டம் முதலான இடங்களில் உள்ள பொதுசன மலசலகூடங்கள் இடிந்தும், தூர்ந்தும், செடி கொடிகள் படர்ந்தும் சீரற்றுக் காணப்படுகின்றன இதனால் மக்கள் மலசலகூடங்களை முறையாகப் பாவிக்காது கண்ட நின்ற இடங்களையெல்லாம் அசுத்தப்படுத்திச் சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்துகின்றனர்.

நகரத்தின் உட்பகுதியில் உள்ள பல வீதிகள் குன்றும் குழியுமாகக் காட்சிதருகின்றன.

இவற்றைச் சீர்திருத்துவதற்கு இனியாவது நகரசபை கவனம் செலுத்துமா?

க. குமாரதீபன்
வவனியா.

### பனிப்புலத்திற்கு மின்வேலைகள்

### நடக்காததுபற்றிக் கவலை

(பண்டத்தரிப்பு)

பனிப்புலம் கிராமத்திற்கு இதுவரை மின்சார விநியோகம்செய்ய எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென்றும், இதற்கு இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவினால் 77 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் மின்சார விநியோகத்திற்கான வேலைகளெதுவும் நடக்கவில்லையென்றும் கடந்தவாரம் பனிப்புலம் ஸ்ரீ அம்பாள் ஆலயத்திற்கு அருகாமையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் கவலைதெரிவிக்கப்பட்டது. பனிப்புலம் அம்பாள் சனசமூக நிலையமும், சாலையடி மறுமலர்ச்சி மன்றமும் ஒருங்கிணைந்து நடத்திய இக்கூட்டத்தில் பலநூற்றுக்கணக்கான மக்கள் பங்குபற்றினார்கள். இப்பகுதி மின்சாரவிநியோகத்திற்கெனக் கொண்டுவரப்பட்ட மின்சாரப் பங்களை வேறு இடத்திற்கு எடுத்துச்செல்ல மின்சாரப் பகுதியினர் முயன்றுவருவதாகவும், இதனால்மின்சாரம் விரைவில் இப்பகுதிக்குக் கிடைக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லையென்றும் இக்கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது. (அ)


# வொலரோன் ஈ. சீ 50%

வொலரோன் ஒரு சர்வபூச்சி நாசினி. மிளகாய், வெங்காயம் மற்றும் காய்கறிப் பயிர்களைப் பாதிக்கும் தத்துவெட்டி, வெட்டுப்புழு முதலாம் சகல தரைப் பூச்சி புழுக்களையும் ஒழித்துக்கட்டும், மிளகாய், வெங்காயப் பயிர்க் கம்பளப் புழுக்களைக் கட்டுப்படுத்துவதில் விசேஷ சக்தி வாய்ந்தது வொலரோன்.

பாவியுங்கள் BAYER தரமான பீடைநாசினிகள்




200 மி லீட்டர் ரூபா 45-00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பிரிவினைகள் இருக்கும்வரை சமூகம் முன்னேறாது'

(கோப்பாய்)

"இந்து மக்கள் மத்தியில் சாதிவேறுபாடு, மதப் பிரிவினைகள் இருக்கும் வரை நமது சமயமும் சமூகமும் முன்னேற்றமடைய முடியாது. இத்தகைய பிரிவினைகள் நீங்கி உண்மையான ஆத்மீக சிந்தனை ஏற்பட சன்மார்க்க நெறி நின்று இறைவனை வழிபட்டவர் மணிவாசக சுவாமிகள். சாதி குலம் பிறப்பு என்ற சுழியிலே அகப்பட்டும் இறைவனது கருணையினாலே இறைவனுடன் இரண்டறக் கலந்தவர் மாணிக்கவாசக சுவாமிகள். அவரது வாயிலாக வந்து இறைவனது எழுத்தாக மிளிர்ந்து இன்றைய மக்களை வையத்துள் வாழ்வாங்கு வாழவைப்பது திருவாசகம்".

இவ்வாறு கோப்பாய் வீரபத்திரசுவாமி கோவில் மண்டபத்தில் கோப்பாய் இந்து சமயப் பிரசார சபையாரால் நடாத்தப்பட்ட திருவாசக விழாவில் தலைமை வகித்து உரையாற்றுகையில் மேற்படி சபைத் தலைவர் சிவஸ்ரீ சோ. இ. பிரணதார்த்திஹரக் குருக்கள் கூறினார்.

மேற்படி ஆலய பரிபாலன சபை முகாமையாளர் திரு. க. கணேசலிங்கம் கருத்துரை வழங்கினார். ஈழநல்லூர் சௌரி மனோகரி சகோதரிகளின் சங்கீதப் பிரசங்கத்தையடுத்து திருவெம்பாவை, திருவாசக மனனப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் திருவெம்பாவை வீதி பஜனையில் கலந்து கொண்டவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. (அ)

## பொங்கல் விழா பனைவிழாவாகிறது

(புலோலி)

பருத்தித்துறை சிங்கைநகர் உதயசூரியன் கழகம் தைப் பொங்கல் விழாவைப் 'பனை விழா'' வாகக் கொண்டாடவுள்ளது.

இப் பனைவிழா கழகத்தலைவர் திரு. வீ. ஜீ தங்கவேல் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ் விழாவில் பருத்தித்துறை எம். பி. திரு கே துரைரத்தினம் உடுப்பிட்டி எம். பி. திரு த இராசலிங்கம், வடமராட்சி வடக்கு கிழக்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. வை வேலும்மயிலும் வடமராட்சி தெற்குமேற்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு முகுந்தம் பிழக்கு ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்களென அறிவிக்கப் பட்டுள்ளது

## பட்டம் ஏற்றும் விழா

(புலோலி)

இந்துக்களின் கலை, கலாசாரத்தைப் பிரதிபலிக்குமுகமாகப் பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கத்தினால் வருடந்தோறும் நடாத்தப்பட்டு வரும் "பட்டம் ஏற்றும் விழா'' தைப்பொங்கல் தினத்தன்று பருத்தித்துறைக் கடற்கரை மைதானத்தில் நடைபெறுமென்று பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

## கோப்பாயில் இந்து சமய பிரசாரசபை

(கோப்பாய்)

கோப்பாய் இந்து சமய பிரசாரசபை அங்குரார்ப்பணம் கோப்பாய் வீரபத்திரசுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்து சமய தத்துவங்கள், சமய கலாசாரங்கள் ஆகியவற்றை மக்கள் மத்தியில்பரப்பி ஆத்மீக ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கடனும் மாணவர்கள் மத்தியில் சமயக் கல்வியைப் பரப்பவும் இச்சபை வழி வகுக்கும் என மேற்படி சபைத்தலைவர் சிவஸ்ரீ. சோ. இ பிரணதார்த்திஹரக் குருக்கள் இவ் வைபவத்தில் பேசுகையில் கூறினார்.

சபையின் போஷகர்கள்:..... நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குருமக சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசார்ய சுவாமிகள், திரு அ வி மயில்வாகனம், தலைவர் சிவஸ்ரீ சோ இ. பிரணதார்த்திஹரக் குருக்கள், உப-தலைவர் திரு ம கனகரத்தினம், செயலாளர் ஆர் பி சற்குணலிங்கம், கே. ரமேஷ் தனாதிகாரி திரு க கணேசலிங்கம். சபையின் சமய பிரசாரகராக தமிழ்மணி திரு. வி. எஸ் கணேசசுந்தரம் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

## சாயிசமிதி பஜனை

(புலோலி)

மந்திகை ஸ்ரீ சத்திய சாயி சமிதியினரின் விசேட பஜனை கடந்த ஞாயிற்றுக்கிழமை புலோலி கிழக்கு உதயபானு தையிலுள்ள திரு. எஸ். தருமதுரையன் இல்லத்தில் வேதாகம முறைப்படி நடைபெற்றது.

விசேட ஆராதனைகளும், பஜனைப்பாடல்களும், தீப ஆராதனைகளும் இடம்பெற்றன வடமராட்சிப் பகுதியில் உள்ள சகல சாயி பாபா பக்தர்களும் இவ்விசேட பஜனையில் கலந்து கொண்டனர்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## கூட்டு முயற்சியால் பாலர் பாடசாலை

(திருகோணமலை)

சீனக்குடா சர்வோதய இயக்கம் மற்றும் மாதா நற்கலா மன்றம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் ஸ்தாபிக்கப்பட்ட பாலர் பாடசாலை ஆரம்பவிழாவில் திருகோணமலை உதவிஅரசாங்க அதிபர் திரு வி எம். கணேசலிங்கம் கலந்துகொண்டு உரையாற்றினார். இப்பகுதியில் உள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு இத்தகைய கல்விக்கூடம் ஒரு வரப்பிரசாதம் என்றும் சிறுபிள்ளைகள் தங்கள் ஒழுங்கை நிலைநாட்ட இப்பாலர் பாடசாலை பாடுபடும் எனத்தாம் நம்புவதாகவும் சர்வோதயம் உயர்ந்த லட்சியத்தைக் கொண்டது எனவும் அதுதன்னலமற்ற பணிசெய்கிறது என்றும் சகரையும் ஒற்றுமைப்படுத்துகின்றது என்றும் கூறினார்.

இப்பாலர்பாடசாலையை சர்வோதய யக்இகத்தின் பிரதிநிதி சமல் பியசேன குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். டாக்டர் ரெஜி சவரிமுத்து தலைமையில் இவ்விழா நடைபெற்றது. (அ)

## இடமாற்றம்

(உடுப்பிட்டி)

பருத்தித்துறைப் பகுதி மீன் பிடிப்பரிசோதகர் திரு. அல்பிரட் ஜோசப் ஜனவரி முதல் முல்லைத்தீவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## வயோதிப மாதை மோட்டார் சைக்கிள் பந்தாடியது

(முல்லைத்தீவு)

வயோதிப மாதை ப்பந்தாடி விளையாடியது மோட்டார் சைக்கிள்.

இச்சம்பவம் முல்லைத்தீவு வண்ணான் குளம் வீதியல் நடந்தது. இப்பரிதாப மரணத்தைத் தழுவியது சிலாவத்தையைச் சேர்ந்த சில்வெஸ்ரர் அல்லது அண்ணாவி சின்னத்தம்பியின் மனைவியான (68 வயது) சின்னத் தங்கம் என்பவராவர்.

முள்ளியவளை மரணவிசாரணை அதிகாரி திரு. சி. தியாகராஜா ஜே. பி. முல்லைத்தீவு வைத்தியசாலையில் விசாரணை நடாத்தினார். அப்போது காலஞ்சென்றவர் முல்லைத்தீவுச் சந்தையில் தேங்காய் வியாபாரம் செய்தபின் வீட்டுக்கான பொருட்களை வாங்கிக் கொண்டு வீடு நோக்கிச் சென்ற போது வண்ணான் குளம் வீதியில் எதிர்பாரத முறையில் வந்த மோட்டார் சைக்கிள் அவரை மோதியதாம். உடனடியாக ஆஸ்பதிரிக்குக் கொண்டு போன போது அவர் இறந்துவிட்டாரெனத் தெரிவிக்கபட்டது.

இதைத்தொடர்ந்து மரண விசாரணை அதிகாரி விபத்து மரணமெனத் தீர்பளித்தார். மோட்டார் சைக்கிள் உரிமையாளரான ஜேர்ஜ் ஜோண்சன் மோட்டார் சைககிளை ஓட்டியதாகக் கூறப்படும் அந்தோணிப்பிள்ளை சூசைதாசன் ஆகியோரை முல்லைத்தீவுப் பொலிசார் முல்லைத்தீவு பதில் நீதிபதி திரு. எஸ். ஆர். செல்வபார்க்கண்டு முன் ஆஜர் செய்தனர் இருவரையும் அடுத்த மாதம் 2-ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு பதில் நீதிமதி உத்தரவிட்டார். (அ)

## வெளி நாட்டு நிபுணர்கள் பாராட்டு


(திருகோணமலை)

திருகோணமலை உதவி அரசாங்க அதிபர் திரு. வி எம். கணேசலிங்கம் கொழும்பில் நடைபெற்ற உதவி அரசாங்க அதிபர்களுக்கான இருவார பயிற்சிக் கருத்தரங்கில் கலந்து கொண்டு நிர்வாகம் மற்றும் திட்டமிடல் அபிவிருத்திபற்றி ஆங்கிலத்தில் விளக்கமாசஎடுத்துக் கூறி ஐ நா. நிபுணர்களின் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளார்.

நிர்வாகத்துறையில் நீண்ட அனுபவம் உள்ள திரு. கணேசலிங்கம் உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டபின் திருகோணமலை மக்களின் பல பிரச்னைகள் உடனுக்குடன் தீர்க்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (அ)


வெள்ளை அல்லது மண்நிற ஹைசெக்ஸ்
நீங்கள் துணிந்து முதலீடு செய்யலாம்.





பலவருடகால ஆராய்ச்சியின் பயனாக வெள்ளை அல்லது மண்நிற ஹைசெக்ஸ், சிறந்த முட்டையிடும் கோழிகளெனப் பெயர் பெற்றுள்ளன. அவற்றை நம்பி உங்கள் வருமானத்தை முன்கூட்டியே கணக்கிட்டு வைக்கலாம். உங்கள் இலாபத்தை உறுதிப்படுத்த நீங்கள் துணிந்து முதலீடு செய்யலாம்.

தேவையான ஒருநாள் கோழிக்குஞ்சுகளுக்கு இப்பொழுதே பதிவு செய்யலாம். ஆகவே, தாமதியாது எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

Euribrid hisex

ஒரு கோழிக்குஞ்சு - ரூ. 6/75
மறெக்ஸ் மருந்து கொடுக்க குஞ்சு ஒன்றிற்கு 35 சதம்

ZENITH

பைரஹா ஃபார்ம்ஸ்
கட்டான தொலைபேசி - 031 - 2508
உரிமையாளர்கள்: எம். ஐ. எம். நலிம் ஹாஜ்ஜியார் அன்ட் கொம்பனி லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரைவுள்ளது)

## புதிய கடை கட்டிடங்களுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன

மேற்படி எமது புதிய கட்டிடத்தில் (காங்கேசன்துறை வீதி — சி. எஸ். கே. மில் அருகாமை) உள்ள ஏழு கடைகள் கேள்வி மூலம் குத்தகைக்கு உண்டு. விண்ணப்பிக்க விரும்புவோர் ரூபா 100/- மீளப் பெறும் வைப்புப் பணமாகவும், ரூபா 1000/- மீளப் பெறக்கூடிய வைப்புப் பணமாகவும் செலுத்தி, அதற்குரிய கேள்வி விண்ணப்பப் படிவத்தையும், கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளையும் எமது தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம், பொது முகாமையாளருக்கு விலாசமிட்டு, வலது பக்க மேல் மூலையில் ''புதிய கடைக்கான கேள்வி'' எனக் குறிப்பிட்டு, 30-01-'81க்குப் பிந்தாமல் அனுப்பப்படல்வேண்டும்.

பொது முகாமையாளர்

74/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
1980-12-27.

## இராசமாணிக்கம் சிலை திறப்பு

(மட்டக்களப்பு)

மறைந்த தமிழரசுக்கட்சித் தலைவரும், பட்டிருப்புத் தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் சி. மு. இராசமாணிக்கத்தின் முழு உருவச்சிலையொன்று பட்டிருப்புத்தொகுதி களுவாஞ்சிகுடிச் சந்தியில் நிறுவப்படவுள்ளது.

யாழ்ப்பாண பிரபல்ய சிற்பக்கலைஞரான திரு. சிவப்பிரகாசம் இச்சிலையை அமைத்து வருகிறார். சிலை திறப்பு விழா எதிர்வரும் பெப்ரவரி மாசம் தமிழர் விடுதலைக்கூட்டணியின் பாதயாத்திரையின் போது திறந்து வைக்கப்படக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## காந்தி வாழ்த்திய குழந்தை



கொக்குவில்- யாழ்ப்பாணத்தில் ஏன் இலங்கையிலேயே கல்விசசேவை மட்டத்திலும்; தமிழறிந்தோர், சமயநெறி அறிந்தோர் மத்தியிலும் ''எம். எஸ்.'' என்ற அளவில் பெயர் விளங்கும் மு.சின்னத்தம்பியின் மனைவியார் பாக்கியக்கா.

அன்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முன்றலில் பொதுக்கூட்டம். ஒரே சனத்திரள்......

இந்தியாவின் திவ்விய புருஷர் மகாத்மாகாந்தி இலங்கைக்கு வந்தவிடத்து அன்று யாழ்ப்பாண வரவேற்பு...... கதர்ச்சேலையில் அழகாகத் தைக்கப்பட்ட உடையுடுத்தி அழகான கொண்டை கட்டிய 12 வயதுச்சிறுமி பாக்கியம் மேடையிலே பாடுகிறார். ஒரே ஆரவாரம். பாடிய பாடலை (''கற்றுணர்ந்த கல்வியதும், கருதிநிற்கும்......'')யும் அதைக் கேட்டு மகிழ்ந்து காந்தியண்ணல் தன் பொக்கைவாய் திறந்து வாழ்த்தியதையும் நினைவு கூருகிறேன்...

யாரையும் வசீகரிக்கும் பொலிவும் எடுத்த கருமத்தில் ஈடுபாடுகாட்டி எதையும் நல்ல வகையில் செய்யும் சிநேகதி பாக்கியம் சிறுவயதுமுதல் பிற்காலம் வரை என் நண்பியாகவே வாழ்ந்தவர். கொக்குவில் இந்துக்கல்லூரியில் முப்பது ஆண்டுகளுக்கு மேல் தமிழ்த்துறைத்தலைவராக இருந்த குரு தமிழறிஞர் பண்டிதர், சைவப்புலவர் எம். சின்னத்தம்பியின் மனைவியாக விளங்கிய பாக்கியம் தன் கணவரின் கல்வி உயர்ச்சிக்கும், கற்பித்தல் சேவைக்கும் என்றும் ஊக்கம் கொடுத்தவர். ''எம். எஸ்.'' மாஸ்டர் என பெயர் விளங்கிய அவர் சாதாரண ஆசிரியராய் இருந்து லண்டன் கலைமாணி, இலங்கைப் பல்கலைக் கழக டிப்ளோமா பட்டங்கள் பெறக்காரணமானவர். ''பாக்கியக்கா'' என்றும், ''மாஸ்டர் பெண்சாதி'' என்றும் அன்பாக அனைவராலும் அழைக்கப்படும் அவர் ஒரு தயாளமான வர்.

திருமதி நாகம்மா சண்முகநாதன்

## வர்த்தகர்கள் மீது நடவடிக்கை

(புலோலி)

பருத்தித்துறையில் பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய பல வர்த்தகர்கள் யாழ் விலைக் கட்டுப்பாட்டுப் திணைக்களத்தினரிடம் சிக்கிக் கொண்டனர்.

யாழ். உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளர் திரு. கே. எஸ். வேல்முருகு தலைமையில் விலைக்கட்டுப் பாட்டதிகாரிகள் குழுவொன்று கடந்த வாரம் பருத்தித்துறைக்கு வந்து திடீர் வேட்டையை மேற்கொண்ட போதே பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய இவ் வர்த்தகர்கள் விலைக் கட்டுப் பாட்டதிகாரிகள் குழுவிடம் அகப்பட்டுக்கொண்டனர்.

இவ்வர்த்தகர்களுக்செதிராக விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினர் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

CEYLINCO ADS.

# உங்கள் நிதிநிலையை வளம்பெறச் செய்வதே எமது முக்கிய குறிக்கோளாகும்

வரையறுக்கப்பட்ட
இலங்கை வர்த்தக வங்கி
உங்கள் நிதிநிலை பெருக
தனது வங்கிச் சேவையை முழு
மனத்துடன் அளித்து வருகின்றது.

சேமிப்பதற்குப் பலவித ஊக்கமளித்து உங்கள் நிதி நிலையை அபிவிருத்தி செய்வதற்காக இயங்குவதே எமது நோக்கமாகும்.

**நிலையான வைப்புப்பணம்**

காலத்திற்கு ஏற்ப வட்டி வழங்குகின்றோம். 12 மாத நிலையான வைப்புப் பணத்திற்கு 20% முதல், 7 நாள் அறிவித்தலில் மீட்கும் பணத்திற்கு வருடத்திற்கு 9% வரை பலவித வட்டி விகிதத்தை அளிக்கின்றோம்

**சேமிப்புப்பணம்:**

ஒரு வருடகாலத்திற்கு உங்கள் பணத்தை திருப்பி எடுக்காதிருந்தால் 10% வட்டியுடன் மேலுமொரு 5% மேல் வட்டியும் வழங்குகின்றோம்.

பலதரப்பட்ட உள்நாட்டு அபிவிருத்தித் திட்டங்களுக்கு எமது வங்கி நிதி உதவி அளித்து வருகின்றது.

உலகெங்குமுள்ள பல முக்கிய சர்வதேச வங்கிகளுடன் எமக்குள்ள தொடர்பினால் வர்த்தகர்கள் தங்களது சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளைச் சுலபமாக்கிக்கொள்ள முடிகிறது.

எம்முடன் வங்கிக் கணக்கு வைத்துக்கொள்ளுங்கள் — எமது மேலதிக விசேஷ சேவைகளினால் எமக்கென ஒரு நற்பெயரை ஈட்டியுள்ளோம்.



வளமான வாழ்விற்கேற்ற வங்கி

**வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி**

57, சேர் பாறன் ஜெயதிலக்கா மாவத்தை கொழும்பு-1
தொலைபேசி 28193-5

சேவை செய்யும் கிளைகள் :
வெள்ளவத்தை, கொள்ளுப்பிட்டி, கொ. புறக்கோட்டை, கண்டி,
காலி, யாழ்ப்பாணம், மாத்தளை, ... மாத்தறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
10-30, 2-30, 6-00, 9-30
கல்யாணகுமார் - தேவிகா - நம்பியார்
நடித்த
நெஞ்சம் மறப்பதில்லை
(புதிய பிரதி)

ராணி - (யாழ்:நகர்)
தினசரி 10-30, பி. ப. 2-15, 6-00, இரவு 9-30
ஒருதலை காதல்
(குடும்பப் பெண்ணின் கதை)

Today
SANTHI (JAFFNA) Phone:7642. 10-30, 2-30, 4-45, 7-00 and 9-5 P. M.
ANTHONY QUINN IN
Hunchback of Notredam
Scope - Color - Full of Action Packed Movie

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00 9-30
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
மீனவநண்பன்

ராஜா (யாழ்.நகர்) தினசரி 10-30, 2-15, 6-00 & 9-30
வெற்றிகரமான 2வது மாதம்
ஜெய்கணேஷ், சுந்தரராஜன், நம்பியார்,
கே. ஆர். விஜயா, லதா, ஸ்ரீபிரியா, முத்துராமன்
சுப்ரபாதம்
(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
50-வது நாளை நோக்கி
தினசரி 10-30, 2-30, 6-00 & 9-30
ஜெய்சங்கர், சீமா, கே. ஆர். விஜயா
ஒரேவானம் ஒரேபூமி
(வண்ணக்கலர்)

50-து நாளை நோக்கி...
வெற்றிநடை போடுகிறது
ராணி தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
யாழ்ப்பாணம்
இதுவரை வசூல் 2,00,000/-





செவன் ஆர்ட்ஸ் அளிக்கும்
ஒருதலை காதல்
இன்றே குடும்பத்தோடு பார்த்துமகிழுங்கள்


## பூட்டியிருந்த வீட்டில் கொள்ளை

(புலோலி)

மாலை வேளையில் பூட்டப்பட்டிருந்த வீடு உடைக்கப்பட்டு தாலிக்கொடி, தங்க நகைகள், பணம் உட்பட 31,000 ரூபா கொள்ளையடிக்கப்பட்ட சம்பவமொன்று பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

நல்லியடியைச் சேர்ந்த செல்லப்ப சிவசுப்பிரமணி என்பவரது வீட்டிலேயே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக பருத்தித்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஜனாப் பீ. எம். ரூல் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி புலன் விசாரணையிலீடுபட்டுள்ளது.

## புதிய கட்டிடத்தில் நிறுவப்படும்

(உடுப்பிட்டி)

கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தை புதியகட்டிடத்தில் அமைப்பதென கரவெட்டிப்பங்குக் கத்தோலிக்க மக்கள் தீர்மானித்திருக்கின்றனர்.

கரவெட்டிப் பங்குக் கட்டளைக் குரவ அருட்திரு டெமிசிக் அடிகளார் தலைமையில் மேற்படி ஆலயத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இப்புதிய கட்டிடத்துக்குச் சுமார் ஏழு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா செலவாகும்என மதிப்பிடப்பட்டுள்ளது. (அ)


ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எஸ்.எஸ்.ஆர்- விஜயகுமாரி
நடித்த
கலைஞர் கருணாநிதியின்
பூம்புகார்

புத்தாண்டு திரைவிருந்து
Warner Bros
Presents
The Getaway
Full of action, thrill & chills
More Sceited for adults.
The last film of
STEVE Mc QUEEN
before his death

நாகம்ஸ் [சுன்னாகம்]
தினசரி 6-30 9-30
சனி, ஞாயிறு 2-30
நாகேஸ்வரராவ் - சாவித்திரி
தேவதாஸ்

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-15, 9-30.
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
பெரிய இடத்து பெண்

வெலிங்டன்
(யா...)
தினசரி 4 காட்சிகள்
நினைத்தாலே இனிக்கும்

லிடோ
[யாழ்நகர்]
தினசரி 5 காட்சிகள்
REINCARNATION OF PETER PROUD


## 'விளையாட்டுமைதான வசதி சில கல்லூரிகளில்கூட இல்லையே'' -- அமிர்

(பலாலி)

"விளையாட்டுமைதானங்கள் ஒவ்வொருகிராமத்திற்கும் அவசியமானது. துரதிர்ஷ்டவசமாக இன்று யாழ்ப்பாணத்தில் அனேககல்லூரிகளில்கூட விளையாட்டு மைதான வசதிகள் இல்லாதிருப்பதைக் காணக் கூடியதாகவிருக்கிறது''.

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவா திரு. ஏ. அமிர்தலிங்கம் குரும்பசிட்டி உதயதாரகை மன்றம் நடத்திய மைதான வைபவத்திறப்பு சிறப்பு நிகழ்ச்சிக்கு விசேட உதைபந்தாட்டப் போட்டிக்கும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறி...

குரும்பசிட்டி மத்திய விளையாட்டு மைதானத்தில் செல்வன் வி. ஸ்ரீதரன் தலைமையில் நடந்த இந்நிகழ்ச்சியில் திரு அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இளம் சந்ததியினரின் உடலும் உள்ளமும் நன்குபேணப்படுவதற்கு வெற்றி தோல்வியைச் சமநிலையில் நின்று ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கைப் பெற்றுக்கொள்வதற்கும் இத்தகைய விளையாட்டுப் போட்டிகள் உதவுகிறது.

இவ்விளையாட்டு மைதானம் அனுதாபிகளிடம் இருந்து பெற்ற நிதியுடன் அரசாங்கம் கொடுத்த சிறிய நிதியுடன் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளதுமெச்சத்தக்கது. தொடர்ந்தும் நிதி தேவைப்பட்டால் நான் பெற்றுக்கொடுப்பேன்''.

அமரர் சிங்கராசா ஞாபகார்த்தக் கேடயத்திற்காக நடைபெற்ற ஒருநாள் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் சென்மயிலை ஞானமுருகன் விளையாட்டுச்கழகம் வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பரிசில்களை வழங்கினர். திரு. எஸ். நடராசா நன்றிகூறினர். (கு)

## சுண்டிக்குளி சைவமகாசபை வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்,, என்ற கொள்கைக்கு அமைய, 'கோபுரத்தின்' பணி சிறப்பாக அமையட்டும்'' என்றுசுண்டிக்குளி சைவமகாசபைச் செயலாளர் திரு. சி. இராஜேஸ்வரன் . பிராந்திய இந்து மத அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரைக்கு அமைச்சினால் வெளியிடப்பட்ட "கோபுரம்''சஞ்சிகைக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

## திண்டாட்டம்

(திருகோணமலை)

திருகோணமலைக் கச்சேரியில் பென்சன் பணம் எடுக்கச் சென்ற ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர் ஒருவர், சிங்களம் தெரியாமல் திண்டாடினர். காரணம் திருகோணமலைக கச்சேரியில் தற்பொழுது சகல இலாகாக்களிலும் சிங்கள ஊழியர்கள் பெரும்பாலும் நியமனம் செய்யப்பட்டுள்ளதால் அவர்கள்முன் தமது பென்சன் பணம் எடுக்கச் சென்ற வயோதிபர், பல கஷ்டங்களின்மத்தியிலேயே பணத்தைப் பெற்றுக் கொண்டார். (அ)


அசொட்ரின்
நெல், மிளகாய், வெங்காயம்
மரக்கறி, பருத்தி, புகையிலை
ஆகியவற்றில் காணப்படும்
பீடைகளின் முற்றழிப்பிற்கு
அசொட்ரின் 60 பாவியுங்கள்.






சகல,
லங்கெம் விவசாய சேவை
நிலையங்களிலும் கிடைக்கும்
450 மி. லீ. ரூ 103-50


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1981 மாணவர்களுக்கான
ஆங்கிலப் பயிற்சி
3 ஆம் வகுப்பு New Method Seat work 2-50
4 ஆம் வகுப்பு New Method Seat work 3-75
5 ஆம் வகுப்பு New Method Seat work 5-00
6 ஆம் வகுப்பு Seat work in print
7 ஆம் வகுப்பு Seat work 7-75
8 ஆம் வகுப்பு Seat work 3-75
9 ஆம் வகுப்பு Five model test Papers in English 5-00
10 ஆம் வகுப்பு Desk work 4-00
காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

## அன்ரன் கொலை வழக்கு

(யாழ்ப்பாணம்)
பொலிஸ் சார்ஜண்ட் அன்ரன் கொலைவழக்கு நேற்றுமுன்தினம் யாழ் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு ஜனவரி 6ம் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது. (க)

## 'நாயுடு கைதானது சரியானதே' — எம். ஜி. ஆர்.

(மதுரை)
தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் திரு நாராயணசாமி நாயுடு அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டது சரியானதேயென்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் இன்று மதுரையில் நிருபர்களிடம் பேசுகையில் கூறினார்.

விவசாயிகள் கிளர்ச்சி காரணமாக தமிழ்நாட்டில் இதுவரை நாலாயிரத்துக்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

மகாராஷ்டிரத்திலும் ஐயாயிரத்துக்கு மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# தமிழர்கள் ஆதரவளித்தனர் பிரிந்து செல்வதில் வேதனை

## என்கிறார் டட்லி குணசேகரா

(யாழ்ப்பாணம்)
''கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே'' என்ற முதுமொழிக்கேற்ப பலனை எதிர்பாராது சேவையாற்றினேன். அதனால் மக்கள் என் மீது நம்பிக்கை வைத்தனர், நேசித்தனர். அதற்குக் குந்தகம் விளைவிக்க விரும்பிய சிலர் என்மீது அபாண்டமான பழியைச் சுமத்தினர். அவர்கள் மீது எனக்கு வெறுப்பில்லை. அவர்களின் அறியாமையைக் கண்டு வருந்துகிறேன்.

போக்குவரத்து அமைச்சில் உயர்பதவி ஒன்றை வகிப்பதற்காக வடபிராந்தியத்திலிருந்து கொழும்பிற்கு மாறுதலாகிச் செல்லும் வடபிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைவர் திரு டட்லி குணசேகராவுக்கு வ. போ. ச. தலைமைக் காரியாலய உயர் அதிகாரிகளாலும், ஊழியர்களாலும் அளிக்கப்பட்ட பிரியாவிடை வைபவத்திலும் தேனீர் விருந்திலும் கலந்துகொண்டு உரையாற்றிய திரு. டட்லி குணசேகரா மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி வைபவம் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை வ. போ. ச. தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

தலைவர் நேற்றுமாலை கார் மூலம் கொழும்பிற்குப் புறப்பட்டார். வ.போ. ச. உயர் அதிகாரிகளும் ஊழியர்களும் கண்ணீர் மல்க தலைவரை வழிஅனுப்பிவைத்தனர். தலைவர் காரில் ஏறும்போது அவரது கண்களிலிருந்தும் கண்ணீர் சிந்துவதைக் காணக்கூடியதாக இருந்தது. தலைவர் ஊழியர்களைப் பிரிந்து செல்லும்போது வாய்திறந்து எதுவும் பேசமுடியாத நிலையில் தொண்டையடைக்க கையால் சைகை செய்து விடைபெற்றுக் கொண்டார்.

திரு டட்லி குணசேகரா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது; 3 மாதங்களுக்கு மட்டும் வடபிராந்தியத்தில் போக்குவரத்துச் சபைத் தலைவராகக் கடமையாற்ற அமைச்சர் அல்ஹாஜ் முகமதுவினால் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டேன். இங்கு வாழ்கின்ற தமிழ் மக்களின் ஆதரவாலும், வ. போ. ச. ஊழியர்களது ஒத்துழைப்பாலும் இங்கு 16 மாதங்கள் கடமையாற்றக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

இங்கிருந்து மாறுதலாகிச் செல்வதையிட்டு ஓரளவு மகிழ்ச்சி ஏற்பட்டாலும்கூட இங்கு வாழும் மக்களையும், ஊழியர்களையும் விட்டுப் பிரிந்து செல்வதையிட்டு வேதனையடைகிறேன்.

நான் லயன்ஸ் சழகத்தைச் சேர் ஒருவன். சேவையை நோக்கமாகக் கொண்டது லயன்ஸ் சழகம். நானும் ஒரு லயன் என்ற காரணத்தினால்தான் என்னாலும் உங்களுக்குச் சேவையாற்ற முடிந்தது. எனது சேவையைப் புகழ்ந்து பலர் பாராட்டிய போதும்கூட ஒருசிலர் என்மீது களங்கம் கற்பித்துவிட்டனர். காலம்தான் அவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டும்.

மக்களும், ஊழியர்களும் உயர் அதிகாரிகளும் எனக்கு ஆதரவும் ஊக்கமும் அளித்தது போன்று புதிய தலைவருக்கும் அளிக்க வேண்டும். அதுதான் நீங்கள் எனக்குச் செய்யும் ஒரே கைமாறாக இருக்கும். அதைத்தான் நான் எனது இறுதி வேண்டுகோளாக உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

பொது முகாமையாளர் குணரத்தின பண்டார பேசுகையில் கூறியதாவது; வெளிநாடுகளில் தூதுவராகவும், ஐக்கிய நாடுகள் சபையில் உயர் பதவியும் வகிக்கக்கூடிய ஆற்றல்மிக்க ஒரு செயல் வீரன் திரு டட்லி அவர் இங்கு தலைவராகப் பதவி ஏற்றபின் வ. போ. ச. வும், அதன் ஊழியர்களும் பல நன்மை அடைந்துள்ளனர்.

பிரதிப் பொது முகாமையாளர் திரு கே. நாகரத்தினம் பேசுகையில் கூறியதாவது; சேவையால் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தவர் எனது நண்பர் டட்லி குணசேகரா.

சபைச் செயலாளர் திரு. எஸ் என். பாலசிங்கம் பேசுகையில் கூறியதாவது: தலைவரின் சேவை இன்னும் சிறிது காலத்திற்காவது எமக்குக் கிடைக்காது போனது நாம் செய்த துர்ப்பாக்கியமே. அவர் எங்கு சென்றாலும் எமக்கு நல்லதையே செய்வார்.

வட்டார முகாமையாளர் திரு ஆர். இராஜேந்திரா பேசுகையில் ஒருசிலர் எமது தலைவருக்கு தவறு செய்தாலும் அவர் எல்லோருக்கும் நன்மையே செய்துள்ளார் என்றார்.

திரு. சாம்பிள்ளை பேசுகையில், திரு டட்லி குணசேகரா வடக்கிற்கும் தெற்கிற்கும் பாலமாக இருந்தார் என்றார்.

ஆளணி முகாமையாளர் திரு. என் பற்குணம் பேசுகையில், எமது தலைவரிடம் நாம் படிக்கவேண்டிய பாடங்கள் பல உண்டு அவர் தந்தையைப் போன்று தம்கீழ் வேலை செய்யும் ஊழியர்களைக் கண்டிக்கவேண்டிய வேளையில் கண்டித்தும் பாராட்டவேண்டிய வேளையில் பாராட்டியுமுள்ளார் என்றார். (கொ)

## நடமாடும் படகுதிருத்தும் நிலையம்

(சித்தன்கேணி)
காரைநகர் சீ-நோர் நிறுவனத்தினர் நடமாடும் படகு திருத்து நிலையமொன்றை அமைத்திருக்கின்றனர். இந் நிலையத்தின் கேந்திர ஸ்தானம் வல்வெட்டித்துறையாகும் கல்நார் படகிலுள்ளபழுதுகள் மற்றும் படகுகளிலுமுள்ள பழுதுகள் யாவற்றையும் இவர்கள் திருத்திக் கொடுக்கின்றனர்.

சீ-நோர் நிறுவனத்தினரின் இந்த நடவடிக்கைக் மீனவர்கள் தங்கள் படகுகளைக்காரைநகர் சீ-நோர் நிறுவனத்திற்குக் கொண்டு சென்று திருத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது புதிய திட்டத்தின் மூலம் பெரும் பணச்செலவும் கால விரயமும் தவிர்க்கப்பட்டுள்ளன. (ஆ)

## மதுரையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கையிலிருந்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவரும் மற்றும் தமிழ்ப்பேசும் எம். பி.களும் இரண்டாம் தேதி தலைமன்னார் கப்பல் மூலமாக மதுரைத் தமிழ் மாநாட்டுக்குச் செல்லவிருக்கின்றனர்.

## கம்பன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)
பணிப்பின் பேரில் தமிழக அரசின் இரண்டாவது செயலாளர் திரு கா. திரவியநாயகம் 10 அழைப்பிதழ்களை கம்பன் கழகச் செயலாளர் திரு. க. குமாரதாசனுக்கு அனுப்பி வைத்துள்ளார். அத்துடன் கம்பன் கழக உறுப்பினர்கள் 10 பேரும் தங்குவதற்கான இட வசதிகள் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது (கொ)

பயிற்சி

றேடியோ - டெலிவிஷன், ஏயர் கொண்டிசனிங் மூன்று மாத டிப்பிளோமா பயிற்சி- சனி, ஞாயிறு வகுப்புக்கள் 3-1-81வரை மாணவர் அனுமதிக்கப்படுவர். அணுகவும் சேரலாம் நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7793

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் பழம்பணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63 இலக்க அச்சகத்தில் டிசம்பர் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a Newspaper at General Post Office Sri Lanka under No: GE 8948/78 The Eelanaadu P. B. No: 49. TeleGrams: Eelanaadu Phone: 389

அரியாலை, கொழும்புத்துறை

## அத்துமீறல் குடியேற்றக்காரர் வெளியேற்றப்படுவர்.

(யாழ்ப்பாணம்)
கொழும்புத்துறை, அரியாலைப்பகுதியிலுள்ள அரசாங்கக் காணிகளில் அத்துமீறிக் குடியேறியுள்ளவர்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது

இக்காணிகள் யாவும், காணிக்கச்சேரி மூலமே வழங்கப்படவிருப்பதாக, சம்பந்தப்பட்ட வட்டாரத்திலிருந்து அறியப்படுகிறது.

கொழும்புத்துறை, அரியாலை காணி விஸ்தரிப்புத்திட்டத்தின்கீழ் காணி பெறுவதற்குச் சுமார் 3,000 க்கும் அதிகமானோர் விண்ணப்பித்துள்ளனர்

இம்மாதம் 15 ம் தேதிமுதல் 22 ம் தேதவரை நடைபெறவிருந்த காணிக்கச்சேரி பின்போடப்பட்டு, யாழ். அரசாங்க அதிபர் காரியாலயத்தில் 81 ம் ஆண்டு பெப்ரவரி 19 ம், 20 ம் தேதிகளில் காணிக்கச்சேரி நடைபெறும்,

நல்லூர் அரசாங்க அதிபர் காரியாலயத்தில் 81 பெப்ரவரி 26, 27 ம் தேதிகளில் இக் காணிக்கச்சேரி நடைபெறும்.

### இந்தக் காணிகள் ரத்து

கொழும்புத்துறைப் பகுதியில் காணி பெற்று நிரந்தரமாகக் குடியேறாதவர்களின் காணிகள் நேற்று முன்தினம் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

நிரந்தரமாகக் குடியேறாத நூற்றுக்கு மேற்பட்டோரின் காணிகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. இக்காணிகளை காணிக்கச்சேரிமூலம் வழங்கப்படவிருக்கிறது.

அரியாலைப் பகுதியிலும், காணி பெற்று நிரந்தரமாகக் குடியேறாத 60 பேரின் காணிகள் இம்மாதம் 26 ம் தேதி ரத்துச் செய்யப்பட்டுள்ளன. இக்காணிகளும், காணிக்கச்சேரி மூலம் வழங்கப்படவிருக்கின்றன. (சு-அ)

## நடிகர் மரணம்

(சென்னை).
தமிழ்த் திரைப்பட நடிகர் முரளி பாஸ்கர் நேற்று சென்னையில் காலமானார்.

வின்ஸர் (யாழ். நகர்)
31-12-80 முதல் தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர்—ராஜசுலோசனா நடித்த
சங்கிலித்தேவன்
(புதிய பிரதி)

## முக்கிய அறிவித்தல்

### புதிய (வெளிவாரி) மாணவர்களை அனுமதித்தல் 1981-82

இலங்கைப் பல்கலைக் கழகங்களின் சட்டம், கலை, வர்த்தகம், புள்ளிவிபரவியல் ஆகிய வெளிவாரி முதற் தேர்வுகளுக்குரிய விரிவுரைகளுக்கு அனுமதி பெற விண்ணப்பித்த சகல மாணவர்களுக்கும் விபரங்களும், விண்ணப்ப படிவமும் 1-1-1981 முதல் அனுப்பிவைக்கப்படவுள்ளன. எதிர்வரும் 5-1-1981வரை இவற்றை பெறாதோர் உடன் விண்ணப்பிக்கவும்.

தமிழ் மொழிமூல விரிவுரைகள் மட்டக்களப்பில் 37, பிரதான வீதியிலும், யாழ்ப்பாணத்தில் 173/9, ஸ்ரான்லி வீதியிலும் (வெலிங்டன் தியேட்டர் கலரி கேற்றின் முன்பாக) உள்ள பட்டப்படிப்புகள் கல்லூரியில் நடைபெறும். யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள ஏனைய தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் இக்கல்லூரிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பது சகலரதும் கவனத்திற்குரியது.

இலவச விபரங்களை 9''x4'' சுயவிலாசமிடப்பட்ட 50 சத முத்திரை ஒட்டப்பட்ட நீள தபாலுறை அனுப்பி பெறலாம். விபரங்கள் நேரில் விநியோகிக்கப்பட மாட்டாது. மேலும் விபரங்களுக்கு 18-12-1980 ஈழநாட்டைப் பார்க்கவும்.

THE COLLEGE OF DEGREE STUDIES

அதிபர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
16, சென்லோறன்ஸ்வீதி,
கொழும்பு-6.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org